# பெரியபுராணத்தில் நாயன்மார்களின் பண்பாட்டு மரபுகள்

**முனைவர். க. முத்துமாரியம்மாள்**
**எம்.ஏ.,எம்.ஃபில்., பிஎச்.டி.,** இணைப் பேராசிரியர், தமிழ் உயராய்வு மையம்,
யாதவர் கல்லூரி (தன்னாட்சி), மதுரை - 625 014.

**ஆய்வுச்சுருக்கம்**
சேக்கிழார் பெருமானார் படைத்து அருளிய பெரியபுராணக் காப்பியத்தில் அறுபத்து மூன்று நாயன்மார்களின் பண்பாட்டு மரபுகளை வெளிப்படுத்தும் விதமாக இவ்வாய்வு அமையப் பெற்றுள்ளது.தமிழகக் காப்பிய இலக்கிய வரலாற்றில் நாயன்மார்களின் பங்கு மிகவும் இன்றியமையாதது ஆகும். இவர்கள் இறைவனோடு ஒன்றி இறை உணர்வினைத் தாங்கள் உணர்ந்ததோடு மட்டுமல்லாமல் பிற அடியவர்களுக்கும் மக்களுக்கும் உணர்த்தி வந்தனர். இதனால் மக்கள் இறைவனைப் பெரிதும் விரும்பி வழிபட ஆரம்பித்தனர். நாயன்மார்கள் தமிழகத்தில் தோன்றியதன் விளைவால் பக்தி இலக்கிய வளர்ச்சியில் ஒரு முன்னேற்றம் ஏற்பட்டது என்பதே சாலப் பொருந்தும். மேலும் நாயன்மார்கள் தங்களது வாழ்வின் ஒவ்வொரு கால கட்டங்களிலும் அடியெடுத்து வைக்கும்போது தொன்மை மாறாமல் பண்பாட்டு மரபுகளை எவ்வாறு பின்பற்றி வந்தனர் என்ற செய்தியினைப் பெரியபுராணக் காப்பிய இலக்கியம் நன்கு சுட்டுகின்றது. அந்த வகையில் நாயன்மார்கள் இறைவனை வழிபட்ட விதத்தினையும், அவ்விறைவன் அவர்களுக்குச் செய்த அற்புதங்களையும், அவர்கள் பாடிய பல்வேறு பாடல்களின் வழித் தெளிவாக ஆய்வில் விளக்கப்பட்டுள்ளது.

**திறவுச் சொற்கள்**
சைவக்காப்பியம், பெரியபுராணம், பண்பாட்டு மரபுகள், உபநயனம் , மணிமந்திர மருந்துகள்.

**முன்னுரை**
மக்கள் ஓரிடத்தில் குழுவாகக் கூடி வாழ்கின்ற மக்களின் தொகுப்பே சமுதாயமாகும். இச்சமுதாயத்தில் வாழும் மனிதர்கள் காலங்காலமாய்ப் பின்பற்றப்பட்டு வரும் பண்பாடு மரபாகும். பண்பாடு என்பது சமுதாயத்தின் ஒட்டு மொத்த வாழ்வியல் முறைகளைக் குறிக்கும் ஒரு செயல்பாடாகும். சமுதாயத்தில் மக்கள் அனைவரும் ஏற்றுக் கொள்ளக் கூடிய உயரிய பண்பாடுகள் அனைத்தும் உலகம் முழுமைக்கும் பொதுவானவை ஆகும். இவை பழக்க வழக்கங்கள் நம்பிக்கைகள் போன்றவற்றை அடிப்படையாகக் கொண்டது. இப்பழக்க வழக்கங்களின் பின்னணியில்தான் மனிதன் வாழ்கிறான். அவன் விரும்பியோ விரும்பாமலோ தொன்று தொட்டு வருவனவெல்லாம் மரபுகள் ஆகின்றன. இவ்வுலகில் வாழ்கின்ற ஒவ்வொரு மனித இனத்திற்கும் தனித்தனியே மரபு உண்டென்றாலும் தமிழர்களுக்கென ஒரு தனித்த மரபு உண்டு. இத்தகைய மரபைப் பெற்று வாழும் மனித இனங்களுள் மிகப் பழமையான வரலாற்றுப் பெருமையையும் பண்பாட்டுச் சிறப்பினையும் உடையவர்களாய் வாழ்ந்த நாயன்மார்களின் பண்பாட்டு மரபுகளை ஆராய்வதே இவ்வாய்வின் நோக்கமாகும்.

**பெரியபுராணமும் - நாயன்மார்களும்**
அடியவர்கள் இறைவனிடம் கொள்ளும் தூய அன்பினைப் பக்தி என்பர்.உயிரானது உலகப் பற்றுகளை விட்டு விட்டு இறை இன்பத்தில் மூழ்கியிருப்பதையும் பக்தி எனலாம். பக்தி சமய நம்பிக்கையை அடிப்படையாக் கொண்டது.இறைவன் திருவுருவை மனதில் இருத்திப் பக்தி மேற்கொள்வதற்கு மனிதப் பிறவியே சிறந்தது ஆகும் என்பர்.எனவே மனிதன் ஏதோ ஒரு வகையில் இறைவனோடு அன்பு பாராட்டத் தொடங்கினான். அக்காலத்தில் மக்கள் இறைவனுடைய திருவடிகளே வீடுபேறு அளிக்கும் என நம்பி இறைவனை அடைவதையே வாழ்வின் குறிக்கோளாகக் கொண்டனர். அவ்வகையில் பக்தி நெறியை மையமாக வைத்து செயற்கரிய செயல்களைச் செய்த பெரியவர்களாகிய அடியவர்களின் வாழ்வில் நடந்த நிகழ்வுகளைக் கூற வந்த புராணமே பெரிய புராணமாகும். இப்புராணம் சைவ வரலாற்றுக் காப்பியமாகும். இக்காப்பியத்தின் ஆசிரியர் சேக்கிழார் பெருமானார் ஆவார். இவர் பனிரெண்டாம் நூற்றாண்டின் பிற்பகுதியில் வாழ்ந்த சினடியார் ஆவார். இப்புராணத்தைப் பாடியவர்கள் அறுபத்து மூன்று நாயன்மார்களாவர். இவர்களுள் மரபினைப் பின்பற்றி வாழ்ந்த நாயன்மார்களின்

பதிவுகளாக வழிபாடு, குழந்தையைத் தத்தெடுத்து வளர்த்தல், பெயர்சூட்டல், பூணூல் அணிதல், காப்புக்கட்டுதல், நன்னிமித்தம் பார்த்தல், (நம்பிக்கை) பலியிடுதல், திருமணம், இல்லறம், விருந்தோம்பல் போன்ற பல்வேறு நிகழ்வுகள் பதிவாகியுள்ளன.

**வழிபாடு**

ஆதி மனிதன் கொடிய விலங்குகளிலிருந்து தன்னைப் பாதுகாத்துக் கொள்ள மலை இடுக்குகளிலும் பொந்துகளிலும் மரங்களில் பரன்கள் அமைத்தும் வாழ்ந்து வந்தான். இச்சூழ்நிலையில் இருட்டு, இடி, மின்னல், பலத்த காற்று, மழை இவற்றைக் கண்டு மனிதன் அஞ்சினான். அவ்வாறு அஞ்சிய மனிதன் பூமியில் நிகழ்கின்ற பல்வேறு மாற்றங்களை இயக்குவதற்கும் தன் மனதில் ஏற்படுகின்ற அச்ச உணர்வுகளை நீக்கித் தன்னைப் பாதுகாப்பதற்கும் ஒருவன் இருக்கிறான் என்று கருதினான். இதன் விளைவாகத் தோன்றியதுதான் கடவுள் வழிபாடு. இதுவே இன்று கால மாற்றத்தால் பண ஆசையின் காரணமாக வெவ்வேறு வடிவங்களில் மாறி போலிச்சாமியார்களுக்கு வழிவகுத்துவிட்டது. இதனால் அடியவர்களின் மனதில் இறை நம்பிக்கை குறித்த புரிதல்கள் இன்று குறைந்து வருவதினைக் காணலாம். இவ்வாறு மனித இனம் என்று தோன்றியதோ அன்று முதல் இன்று வரை பண்பாட்டு மரபு தொன்று தொட்டு வெவ்வேறு நிலைகளில் இருந்து வருகிறது. இடைக்காலத்தில் தோன்றிய பெரியபுராணக் காப்பியம் வணங்குவதற்குறிய இறைவன் சிவனேயன்றி வேறு தெய்வம் இல்லை என்பதை அடியவர்களிடம் வழியுறுத்துவதற்காகவே இயற்றப்பட்டது. இப்புராணத்தில் தோன்றிய ஒவ்வொரு நாயன்மார்களும் தீவிர சிவ பக்தர்களாவர். இவர்கள் தங்கள் வாழ்வில் கடைபிடித்து வந்த பண்பாட்டு மரபு நிலைகளையும், இறை வழிபாட்டு நிகழ்வுகளையும் காண்போம்.

**குழந்தையைத் தத்தெடுத்து வளர்த்தல்**

பண்டைய காலம் முதல் தற்காலம் வரை சமுதாயத்தில் குழந்தைப் பேறு இல்லாத பெண்களுக்குச் சமூகம் இளைத்திருக்கும் கொடுமைகள் ஏராளம். இந்நிலையில் அவர்கள் இல்லங்களில் நடக்கும் சுப நிகழ்வுகளில் கூட கலந்து கொள்ள முடியாத அவல நிலைக்குத் தள்ளப்படுகின்றனர்.அவர்களுக்குச் சம உரிமைகள் வழங்க சமூகம் மறுக்கின்றது. இதனால் குழந்தைப் பேறு இல்லாதவர்கள் மனமுடைந்து உறவினர், உறவினர் அல்லாதார் குழந்தைகளைத் தத்தெடுத்து வளர்க்கும் மனப்பக்குவத்திற்கு தன்னை மாற்றி வாழக் கற்றுக் கொண்டனர். இவ்வழக்கம் சமூகத்தில் இன்றும் நிலவி வருகின்றது. நரசிங்க முனையரையர் என்ற சிற்றரசர் திருநாவலூரில் ஆதி சைவர் குலத்தைச் சேர்ந்த சடையனாருக்கும் இசைஞானியாருக்கும் மகனாகப் பிறந்த நம்பியாரூரர் (சுந்தரர்) என்ற பெயருடைய குழந்தையினை எடுத்து வளர்த்துள்ளார் என்ற செய்தியினைப் பெரியபுராணம் வழி அறியலாம்.

“விரவிய நண்பினாலே
வேண்டினர் பெற்று தங்கள்
அரசு இளங்குமரற்கு ஏற்ப
அன்பினால் மகன்மை கொண்டார்.
(தடுத்தாட் கொண்ட புராணம்இபா.எண்-5:5-8)

என்னும் பாடலடிகளின் வழி அக்காலத்தில் வாழ்ந்த மக்கள் குழந்தையைத் தத்தெடுத்து வளர்த்த வந்த செய்தியினை அறிய முடிகின்றது.

இதே கருத்தினை மணிமேகலையில் காணும்போது,

“ஆமகன் அல்லன் என்மகன்” என்றே,

காதலி தன்னொடு கைதொழுது எடுத்து”

(மணி, காதை-13:19-20)

என்ற பாடல் வரிகளின் வாயிலாக வயனங்கோடு என்னும் ஊரைச் சேர்ந்த மறையோம்பும் பார்ப்பனனான இளம்பூதி என்பான் சாலியின் மைந்தனான ஆபுத்திரனை எடுத்து வளர்த்தார் என்ற செய்தியினைச் சீத்தலைச் சாத்தனார் பதிவு செய்திருப்பது இங்கு நினைவு கூறத்தக்கதாகும்.

**பெயர் சூட்டல்**

இடைக்காலத்தில் வாழ்ந்த நாயன்மார்கள் தங்கள் குழந்தைகளுக்குப் பெயர் சூட்டும்போது குல மரபினைப் பின்பற்றி வாழ்ந்து வந்தனர். அந்த வகையில்

வேடர்களுக்கெல்லாம் அரசனாய்த் திகழ்ந்து வந்தவன் நாகன் ஆவான். இந்நிலையில் நாகன் தத்தை தவமிருந்து பெற்ற மகனின் மீது கொண்ட அன்பின் மிகுதியால் வேடர்கள் அக்குழந்தையினைத் தங்கள் கைகளில் எடுத்து "திண்ணன்" என்னும் திருப்பெயரினைச் சூட்டி மகிழ்ந்தனர் என்பதனை,

"அண்ணலைக் கையில் ஏந்தற்கு
அருமையால் உரிமைப் பேரும்
திண்ணன் என்று இயம்பும் என்னத்
திண்சிலை வேடர் ஆர்த்தார்"

. (கண். நாயனார். புராணம், பா.எண்-17:1-4)

என்னும் பாடல் வரிகள் சுட்டிக்காட்டுகின்றன.

மேலும், சிவனேசர் தன் மகளுக்குப் பூம்பாவை எனப் பெயர் சூட்டி மகிழ்ந்தார். இறைவன் திருவருளால் பிறந்த சுந்தரருக்கு அவரது பெற்றோர் நம்பியாரூரர் எனப் பெயர் சூட்டினர். ஆப்பூதியடிகள் திருநாவுக்கரசரைப் பார்க்காமலேயே தன் பிள்ளைகளுக்கும் பிறவற்றிற்கும் திருநாவுக்கரசர் பெயரையே சூட்டினார். இக்கருத்திலிருந்து மக்கள் அன்று முதல் இன்று வரை தங்கள் குழந்தைகளுக்குப் பெயர் சூட்டி மகிழ்ந்து வருகின்றனர் என்பதை அறியலாம்.

**பூணூல் அணிதல்**

நம்பியாரூரருக்கு அவரது குலவழக்கப்படி பூணூல் அணியும் சடங்கு செய்யப்பட்டது. திருமண விழாவில் திருஞானசம்பந்தரை மஞ்சள் நீரில் குளிப்பாட்டி வெண்பட்டு உடுத்தி, நறுமணக் கலவைச் சாந்துகளைப் பூசி முத்துக் கோவையாலாகிய பூணூலினை அணிவித்தனர்.சண்டேசுவர நாயனார் சோழ நாட்டில் சேய்ஞலூர் எனும் ஊரில் வாழ்ந்து வந்த அந்தணரான எச்சதத்தன் பவித்திரை தம்பதிகளின் மகனாவார். இவரை விசாரசர்மா என்று அழைத்தனர். விசாரசர்மரின் பெற்றோர் அவரது ஏழாவது அகவையில் உபநயனம் என்னும் பூணூல் அணியும் சடங்கினைச் செய்தார்கள்.

**காப்புக் கட்டுதல்**

சமுதாயத்தில் நடக்கும் பழக்க வழக்கங்களுள் ஒன்று காப்புக் கட்டுதல் என்னும் சடங்கு முறையாகும். இந்நிகழ்வு ஒவ்வொரு கால கட்டங்களிலும் வெவ்வேறு விதமாக நடைபெறும்.ஒருவருக்கு ஒரு நல்ல காரியத்தைச் செய்வதற்கு முன் நம் முன்னோர்கள் காலம் காலமாய்ப் பின்பற்றி வந்த வழக்கப்படி அந்நிகழ்விற்கு உரிய நபரின் கைககளில் காப்புக் கட்டுதல் என்ற சடங்கு முறைகள் அந்நாளில் இருந்து வந்துள்ளது.

"சிலையினைக் காப்புக் கட்டும்
திண்புலி நரம்பில் செய்த
நலம்மிகு காப்பு நல்நாண்"

(கண்.நாய.புராணம்,பா.எண்- 682:33-35)

திண்ணனார் வில்வித்தை பயிலச் செல்லும் முன் மழையர்களாகிய வேடர்களின் குலம் சிறந்தோங்க அவரின் அழகிய முன் கையில் காப்புக் கட்டினர்.அவன் வில்லிற்கும் புலி நரம்பிலாலான காப்புக் கட்டப்பட்டது. அதே போல் ஞானசம்பந்தர் பிறந்தபோது வேப்பிலையைக் காப்பாகக் கட்டினர். திருமணத்திற்கு முன் திருஞானசம்பந்தரும் சுந்தரரும் பொற்காப்பை அவர்கள் கையில் அணிந்திருந்தனர். இன்றும் கோயில்களில் விழா நடப்பதற்கு முன் நேர்த்திக்கடன் செலுத்தக் கூடியவர்களின் கைகளில் கோயில் பூசாரி காப்புக் கட்டிவிடும் நிகழ்வினைக் காணலாம். மேலும் திருமணத்திற்கு முன் மணமகனுக்கும் மணமகளுக்கும் காப்புக் கட்டும் வழக்கம் இன்றும் சமூகத்தில் இருந்து வருவதினை நாம் காண முடிகின்றது.

**நன்னிமித்தம் பார்த்தல்**

பண்டைய காலம் தொடங்கி இன்று வரை மக்கள் நல்ல நேரம், கெட்ட நேரம் எனப் பிரித்து, அதில் கெட்ட நேரத்தை நீக்கி விட்டு நல்ல நேரங்களில் எந்த ஒரு செயலையும் தொடங்க வேண்டும் என்பதைத் தங்களின் வழக்கங்களுள் ஒன்றாகக் கடைபிடித்து வருகின்றனர். பெரியபுராணத்தில் திண்ணன் வேட்டைக்குச் செல்லும் முன் தேவராட்டி நற்குறிகளைக் கண்டு வாழ்த்தியுள்ளார் என்பதனை,

"எற்றையினும் குறிகள் மிக நல்ல ஆன
இதனாலே உன்மைந்தன் திண்ணன் ஆன
வெற்றி வரிச்சிலையோன் நின் அளவில் அன்றி
மேம்படுகின்றான் என்று விரும்பி வாழ்த்திக்"

(கண்.நாய.புராணம், பா.எண்-700 :53-56)

என்னும் பாடலடிகள் குறிப்பிடுகின்றன. குலச்சிறையாரும் மங்கையர்க்கரசியாரும் சம்பந்தர் வருகையை எண்ணிக் காத்திருந்தபோது நன்னிமித்தங்கள் தோன்றியதாகவும், சேரமான் பெருமாள் சுந்தரரைச் சந்திக்க நல்ல நாள் பார்த்துப் புறப்பட்டதாகவும் அறிய முடிகின்றது. மேலும் ஞானசம்பந்தர் எங்களுடைய சைவ சமயம் தான் முதன்மையானது என்று சைனர்களோடு வாதிடுவதற்காக மதுரைக்குப் புறப்படும்போது உடன் இருந்த அடியவர்கள் இன்று சகுனம் சரியில்லை என்று கூறித் தடைகளை விதித்தனர். இவ்வாறு அன்றைய சமூகத்தில் வாழ்ந்த மக்கள் தங்களது வாழ்வில் விதிக்கப்பட்ட வாழ்வியல் மரபுகளைப் மீறாமல் வாழ்ந்து வந்ததை அறிய முடிகின்றது. இவ்வழக்கம் இன்றும் சமூகத்தில் மக்களிடம் இருந்து வருவதனை அறியலாம்.

**மந்திரித்தல்**

அறியியல் வளர்ச்சியடைந்த இக்காலத்திலும் தீய அணங்குகள் தன்னை அண்டி விடுமோ என்ற அச்சத்தால் மந்திரித்த தாயத்தை அல்லது ஏதாவது ஒரு கயிற்றைப் பெரியவர் முதல் சிறியவர் வரை கைகளில் அல்லது கழுத்தில் அணிவதும்இ மந்திரித்த தண்ணீரைக் குடிப்பதும் மரபாக உள்ளது. பெரியபுராணத்தில் திருநாவுக்கரசர் சூலை நோயால் அவதியுற்ற வேளையில் சமணர்கள் 'மணிமந்திர மருந்துகளால்' மந்திரித்த தண்ணீரைக் குடிக்கக் கொடுத்து குணப்படுத்த முயன்றனர் என்றுமஇ; பின்னர் நாவுக்கரசரின் தமக்கை திலகவதியார் தன்னுடைய அருள் திறத்தால் மந்திரித்த விபூதியைக் கொடுத்துக் குணப்படுத்த முயன்றபோது அந்நோய் குணமாகியது என்றும் அறியலாம்.

" குண்டிகைநீர் மந்திரித்தும்
குடிப்பித்தும் தணியாமை"

(திருநா.நாய.புராணம், பா.எண்-1323:55-56)

"குன்று உடையார் திருநீற்றை அஞ்சு எழுத்து ஓதிக் கொடுத்தார்"

(திருநா.நாய.புராணம், பா.எண்-1336:69)

என்ற இரு பாடல்களின் வழி அன்று முதல் இன்று வரை மக்கள் மத்தியில் மந்திரித்தல் என்னும் வழக்கம் மனதில் ஆழமாய் பதிந்து வருகின்றதை அறிய முடிகின்றது. ஆனால் இன்று நாகரிகம் என்ற பெயரில் பெரியவர் முதல் சிறியவர் வரை கால்களில் மந்திரித்த கயிற்றினைக் கட்டியிருப்பதைக் காண முடிகின்றது.

**பலியிடுதல்**

பழங்காலந் தொட்டு இன்று வரை மனிதன் தன் மனதில் வேண்டிய காரியம் நிறைவேற உறவுகளை நாடிச் செல்லாமல் தாங்கள் வழிபடுகின்ற குலதெய்வத்தின் மீதும் ஊரில் நடைபெறும் கோயில் திருவிழாக்களில் அங்குள்ள தெய்வத்தின் மீதும் நம்பிக்கை கொண்டு பலியிடுவதாக வேண்டுகின்ற நிகழ்வுகள் மரபாக இருந்து வருகின்றன. அந்த அடிப்படையில் பெரியபுராணத்தில் திண்ணன் வேட்டைக்குச் செல்லும் முன் அவன் தந்தையாகிய நாகனிடம் தேவராட்டி வன தெய்வங்கள் மகிழும்படி பலியிடுவதற்குரிய பொருள்களையெல்லாம் குறைவின்றிப் பெற்றுக் கொண்டு, காட்டில் உறைந்திருக்கும் தெய்வத்திற்குப் பலி கொடுத்த பின் திண்ணனனிடம் வந்து அவனை வணங்கச் செய்து வாழ்த்தி வழியனுப்பினார்.

"மானச்சிலை வேடர் மருங்கு நெருங்கு போதில்
பானல்குல மாமலரின் படர் சோதியார் முன்
தேன்நல் தசைதேறல் சருப்பொரி மற்றும் உள்ள
கானப்பலி நேர்கடவுள் பொறையாட்டி வந்தாள்"

(கண்.நாய.புராணம்,பா.எண்-714)

என்னும் இவ்வடிகள் அன்றைய வேட்டைச் சமூக மக்களின் குல வழக்கு மரபு முறைகளைச் சுட்டிக் காட்டுகின்றது.

**திருமணச் சடங்கு முறைகள்**

அக்காலத்தில் தன் மகனுக்கு மணம் முடிக்க வேண்டுமென்றால் ஒரு மாதத்திற்கு முன் கூட்டியே பெண்ணைப் பெற்ற பெற்றோரிடம் ஊரில் உள்ள பெரியவர்களை அனுப்பித் திருமணம் நடைபெறுவதற்கு இசைவு கேட்கும் வழக்கம் இருந்துள்ளது.

" குலமுதல் அறிவின் மிக்கார்
கோத்திர முறையும் தேர்ந்தார்
நலமிகு முதியோர் சொல்ல..."

(தடுத்தாட் கொண்ட புராணம்,பா.எண்-154:8-9)

சுந்தரருக்குத் திருமண வயது வந்த போது, அவரது தந்தை நரசிங்க முனையரையர் (வளர்ப்புத் தந்தை) புத்தூர் சடங்கவி சிவாச்சாரியார் மகளைப் பெண் கேட்கப் பெண் வீட்டிற்கு முதியவர்களை அனுப்பினார்.இதே போல் வேளாண் குலத்தைச் சேர்ந்த கலிக்காம நாயனாருக்கு மானக்கஞ்சாறர் மகளைப் பெண் கேட்டு மூதறிஞர்கள் சென்றனர்.நாகப்பட்டினத்து வணிகன் மகன் பரமதத்தனுக்கு அவர் குலத்தைச் சேர்ந்த தனதத்தனிடம் புனிதவதியைப் பெண் கேட்டு அறிவுடைய சான்றோர்கள் சென்றனர்.

**திருமணம் நடைபெறும் இடம்**

இடைக்காலத்தில் திருமணங்கள் மணமகள் இல்லத்தில் நடந்துள்ளது.அந்த வகையில் ஞானசம்மந்தர் மணப் பெண் ஊராகிய திருநல்லூருக்கு மணம் முடிக்கச் சென்றார் என்பதையும், அதே போல் சுந்தரர் பரவை நாச்சியார், சங்கிலி நாச்சியார் இருவரையும் அவரவர் ஊர்களுக்கே சென்று மணந்தார் என்பதையும் அறியலாம்.

**திருமணம் நடைபெறும் விதம்**

அக்காலத்தில் முதலில் மணமகனை நன்கு ஒப்பனை செய்துள்ளனர் என்பதனை சுந்தரரை அரியாசனத்தில் அமர்த்தி, நறுமணப் பொருள்களோடு கலந்த தூய நீரில் நீராட்டி உடல் முழுவதும் வாசனைத் திரவியங்களைப் பூசிப் பட்டாடை அணிவித்து ஒப்பனை செய்து பின் மணவறையில் மாப்பிள்ளை அலங்காரத்தில் அமர வைத்தனர் என்ற செய்தியின் மூலம் அறியலாம்.

"அகில் வரைத் தூபம் ஏந்த
அணிகொள் பட்டாடை சாத்தி

(தடுத்தாட் கொண்ட புராணம், பா.எண்-162:16-17)

என்னும் பாடலடிகள் மெய்ப்பிக்கின்றன.

**இல்லற மரபு**

சிறுத்தொண்ட நாயனார், அப்பூதியடிகள், இளையான்குடி மாறநாயனார் இவர்களின் வாழ்க்கைப் பதிவுகள் இல்லற மரபிற்குச் சிறந்த எடுத்துக்காட்டுகளாகும்.

**விருந்தோம்பல் பண்பு**

இளையான்குடி மாறநாயனார் சிவன் மீது கொண்ட பற்றினால் இயல்பிலேயே சிவனடியார்கள் யாராக இருந்தாலும் அவர்களை அன்போடும் மகிழ்வோடும் தன் இல்லத்திற்கு வரவழைத்து உணவளித்து வரும் மரபினைக் குறிக்கோளாகக் கொண்டிருந்தார். இச்சூழலில் ஒரு நாள் சிவனே அடியார் வேடம் தரித்து நாயனாரின் இறை பக்தியைச் சோதிக்க அவரின் இல்லம் நோக்கி உணவு கேட்டு வர நாயனார் தன் கொடிய வறுமையிலும் அவரை இன்முகத்தோடு வரவேற்று மரப்பலகையில் அமரச் செய்து செய்வதறியாமல் திகைத்து மனைவியின் முகம் நோக்க, இக்கட்டான சூழ்நிலையில் கணவரின் மனநிலையைப் புரிந்து கொள்கிறவளே நல்ல துணைவியாவாள். ஆதற்கு எடுத்துக்காட்டாய்த் திகழ்ந்த நாயனாரின் மனைவி வறுமையை முகத்தில் காட்டிக் கொள்ளாமல் சிறந்த குடும்பத்தலைவியாக நாயனாரை நோக்கி,

"செல்லல் நீங் கப்பகல் வித்திய செந்நெல்
மல்லல் நீர்முளை வாரிக் கொடுத்து வந்தால்
வல்லவாறு அமுது ஆக்கலும் ஆகும் மற்று
அல்லது ஒன்று அறியேன் என்று அயர்வுஉற"

(இளை.மாறநா.புராணம்,பா.எண்-452)

என்று கூறிய துணைவியாரின் சொற் கேட்டு நல்லிரவு வேளையில் கொட்டுகின்ற மழையிலும் தன் காலால் தடவிச் சென்று காலையில் வயலில் விதைத்த நெல்

முளைகளை அரித்து வந்து கொடுத்தார்.பின் கறிக்கு என்ன செய்வதென்று நினைக்கையில் குப்பையில் உள்ள கீரைகளைக் கிள்ளி கறி சமைத்து அறுசுவை உணவினைத் தயார் செய்து விருந்து அளித்தார்கள்.

"அன்பும் அறனும் உடைத்தாயின் இல்வாழ்க்கை
பண்பும் பயனும் அது"

(குறள்-45)

என்ற திருவள்ளுவரின் கூற்றிற்கு இணங்க நாயனாரின் மனைவி அன்பையே பண்பாகவும் அறத்தையே பயனாகவும் கொண்டு ஒரு சிறந்த இல்லத்தரசியாகத் திகழ்ந்து வந்ததை அறிய முடிகின்றது. இவர்கள் தங்கள் வாழ்வில் பின்பற்றிய இல்லற மரபும், விருந்தோம்பல் பண்பும் போற்றுதலுக்குறியனவாகும். இதே கருத்தினைச் சிறுபாணாற்றுப் படையிலும் காணலாம்.

பாணனின் குடும்பம் வறுமை நிலையில் உள்ள சூழலில் பசித்துன்பம் வாட்டியதால் அவரின் மனைவி தன்வீட்டுக் குப்பையில் தானாகவே முளைத்த வேளைக் கீரையைப் பறித்து தன் கை நகங்களால் கிள்ளி வேக வைத்தாள். பொருளாதாரம் இல்லாத குறையினால் கிடைத்த அக்கீரைக்கு இட வேண்டிய உப்புக் கூட அந்த வீட்டில் இல்லை. எனவே உப்பில்லாமலேயே வெந்த கீரையை உண்ண அவ்வீட்டில் உள்ள பலரும் காத்திருந்தனர்.

வறுமையிலும் செம்மை என்பது போல, தன் குடும்ப வறுமை வெளியில் எவருக்கும் தெரியாதவாறு வீட்டு வாயில் கதவை மூடி உப்பில்லாமல் வெந்த கீரையை அனைவரும் உண்டனர்.

"குப்பை வேளை உப்பிலி வெந்ததை
மடவோர் காட்சிநாணிக் கடையடைத்து
இரும்பேர் ஒக்கலொடு ஒருங்குடன் மிசையும்"

(சிறுபாணாற்றுப்படை,137-139)

என்னும் நல்லூர் நத்தத்தனாரின் கூற்றுப்படி சங்க காலத்தில் வாழ்ந்த பெண்கள் வறுமை நிலையிலும் விருந்தோம்பும் பண்பினை உயர்வாகக் கருதி வாழ்ந்துள்ளனர் என்பதை உணர முடிகின்றது.

**முடிவுரை**

பெரியபுராணக் காப்பியத்தில் இடம்பெற்ற கருத்துக்களின் மூலம் அக்காலத்தில் வாழ்ந்த சிவனடியார்களான அறுபத்து மூன்று நாயன்மார்கள் சமுதாயத்தில் நம் முன்னோர்கள் பின்பற்றி வந்த பல்வேறு பழக்க வழக்கங்களையும், சடங்குமுறைகளையும் தங்கள் வாழ்வில் பண்பாட்டு மரபு மணம் மாறாமல் எவ்வாறு கடைபிடித்து வாழ்ந்து வந்தனர் என்பதனை இவ்வாய்வின் மூலம் அறிய முடிகின்றது. ஆனால் இன்று நாகரிகம் என்ற பெயரில் சடங்கு முறைகள் சற்று வேறுபாட்டுடன் மனித சமுதாயத்தில் பின்பற்றப்பட்டு வருகின்றன.

**துணைநூற்பட்டியல்**

1. பி.ரா.நடராசன் (உ.ஆ), பெரியபுராணம்- மூலமும் உரையும்-12ஆம் திருமுறை முதல் பகுதி-உமா பதிப்பகம்,சென்னை-600001.
2. பி.ரா.நடராசன்(உ.ஆ), பெரியபுராணம் -மூலமும் உரையும் -12ஆம் திருமுறை இரண்டாம் பகுதி-உமா பதிப்பகம், சென்னை-600001.
3. புலியூர்க்கேசிகன், மணிமேகலை - செண்பகா பதிப்பகம், சென்னை -600017.
4. ச.வே. சுப்பிரமணியன் (ப.ஆ), பதினெண் கீழ்க்கணக்கு நூல்கள் - மூலமும் தெளிவுரையும் -மணிவாசகர் பதிப்பகம், சென்னை -600108.
5. ச.வே.சுப்பிரமணியன், சங்க இலக்கியம் பத்துப்பாட்டு - மணிவாசகர் பதிப்பகம், சென்னை 600108.